# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 70 — 1973 ජූලි 27 වැනි සිකුරාදා — 1973.07.27**

70 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூலை மாதம் 27 ம் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. | 753 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 756 | ஏலவிற்பனைகள் | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் | — | நானாவித அறிவித்தல்கள் | 756 |


# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

பின்வரும் போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன :—

1. கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகச் சரக்கு மேடையில் இருந்து வாழைச்சேனைக்கு சரக்குகளை எடுத்துச் செல்லுதல்.
2. கொழும்பிலிருந்து வாழைச்சேனைக்கு கழிவுக் கடதாசியை எடுத்துச் செல்லுதல்.

1973, ஆகஸ்ட் 7 ம் திகதி பி. ப. 2.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் மூடப்படும்.

கேள்விப்பத்திரங்களையும் மற்றும் ஏனைய விபரங்களையும் விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

பதில் பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

7–1008—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

### அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

கொழும்பு 1, லோட்டஸ் வீதி, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமையகம், 5வது மாடி, அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் (எந்திரவியற் பகுதி) யைச் சார்ந்த பகுதிக் கேள்விச்சபைத் தலைவரினால் பின்வரும் இனங்களை விநியோகிப்பதற்கும், ஒப்படைப்பதற்குமான கேள்விகள் 1973, ஆவணி 22 ம் திகதி மு. ப. 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. 2 தொன் துத்தநாகத் துண்டுகள்—99 சதவீதம் துப்பரவான.
2. 500 இல. கொண்ட பித்தளை அல்லது அலுமினிய உருளைகள். இம்மாதிரிகளின் விளக்கப்படங்களை பிரதான தொலைத்தொடர்பு எந்திரியின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் (பித்தளை, அலுமினிய உருளைகளுக்கான வீதங்களை புறம்பாகக் குறிப்பிடுதல் வேண்டும்).
3. 30,000 பி. வி. சி. முப்புரிக் கம்பி (வயர்)

கொழும்பு 1, லோட்டாஸ் வீதி, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமையகம், 5 வது மாடியிலுள்ள பிரதான தொலைத்தொடர்பு எந்திரியின் அலுவலகத்திலிருந்து பெறப்படும் படிவங்களில் இரட்டைப் பிரதிகளில் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்விடயம் சம்பந்தமான சகல விடயங்களையும் இவரிடமிருந்து பெற்றுக்கொள்வதுடன் இவரது அலுவலகத்தில் கேள்விச் சாதனங்களையும் பரிசோதித்துக் கொள்ளலாம்.

இவ்வலுவலகத்தில் விண்ணப்பிக்க விரும்பும் கேள்வியாளர்கள், கொழும்பு 1, கோட்டை மத்திய தந்தி அலுவலக தந்திக் காசாளரிடம் அல்லது அஞ்சலலுவலகமொன்றிற்குப் பொறுப்பாயுள்ள அஞ்சலதிபரிடம் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 50 ஐச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டைக் கையளித்ததும் 1973.08.17 திகதி நண்பகல் 12 மணிவரை கேள்விச்சாதனங்கள் இவர்களுக்கு வழங்கப்படும்.

எச். பி. எஸ். ஏ. குணவர்த்தன,
பிரதான தொலைத்தொடர்பு எந்திரி.

பிரதான தொலைத்தொடர்பு எந்திரியின் அலுவலகம்,
5 வது மாடி,
அ. தொ. தலைமையகம்,
லோட்டஸ் வீதி,
கொழும்பு 1,
18.06.73.

7–975—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

### முக்கிய அறிவித்தல்

***இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.***

***எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,***
***அரசாங்க அழுத்தகர்.***

***அரசாங்க அச்சுத் திணைக்களம்,***
***கொழும்பு,***
***1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந் உ.***

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் தேதி மு. ப. 10.00 மணிவரை, 1974 ஆம் ஆண்டுத் தேவைகட்கான அச்சிட்ட படிவங்களையும் பதிவேடுகளையும் அச்சிட்டு வழங்குவதற்காகப் பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிவரை பொரலஸ்கமுவை, வெரகெரை இலங்கைப் போக்குவரத்துச் சபை பிரதம விநியோக உத்தியோகத்தரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடியதான பத்திரங்களில் கேள்விப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படவேண்டும். மீளளிக்கப்படக் கூடிய கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100 ஐயும் மீளளிக்கப்படமாட்டாத கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா 10 ஐயும் பொரலஸ்கமுவவை, வெரகெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பிரதம கணக்காள உத்தியோகத்தரின் அலுவலகத்தில் காசாகக் கட்டி இதற்கான பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு முன் காட்டவேண்டும்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம விநியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

விநியோகப் பகுதி,
வெரகெரை,
பொரலஸ்கமுவை,
9, யூலை 1973.

7–1015—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி மு. ப. 10.00 மணிவரை பின்வரும் வேலைக்கான வேறுன பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

| விவரணம் | ஒப்பந்தக்காரர்களின் ஆகக் குறைந்த பதிவுத் தொகை ரூபா |
|---|---|
| (1) 5000 கலன்கள் கொள்ளக்கூடிய நீர் தாங்கியை நித்தம்புவைச் சாலையில் அமைத்தல்—ஈசி/549 .. | 25,000 |

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக்கொள்வதுடன் இவரின் அலுவலகத்தில் படவரைவுகளையும் பரிசீலனை செய்யலாம். ஒவ்வொரு வேலைக்கும் எதிராகக் காட்டப்பட்ட தொகைக்காக இ. போ. ச. வில், அரசாங்கத் திணைக்களங்களில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தேவையான கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக 1 ஆம் விடயத்திற்கு ரூபா 100 க்கான மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பத்திரக் கட்டுப் பணப் பற்றுச் சீட்டையும், மீளளிக்கப்படமாட்டாத கேள்விப் பத்திரக் கட்டணமாக 1 ஆம் விடயத்துக்கு ரூபா 25 க்குமான பற்றுச் சீட்டையும் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14 ஆம் தேதி நண்பகல 12.00 மணிக்கு அல்லது முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன் பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களது சான்றோலைகளைப் பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றோலைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுகொள்ளப்பட்ட பின்னரே கேள்விப்பத்திரக் கட்டுப் பணத்தை **காசாக மாத்திரம்** பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு–5.

7–1009—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

### காணி ஆணையாளர் திணைக்களம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கீழ்க்குறிப்பிடும் வேலைகள் செய்வதற்காக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களால் 1973.08.27 ம் திகதி பிற்பகல் 2.00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| வேலை விபரம் | தேவைப்படும் பதிவுத் தொகைகள் ரூபா |
|---|---|
| (i) யாழ்ப்பாண மாவட்டம் கராச்சிக் காரியாதிகாரி பிரிவிலுள்ள கிளிநொச்சிக் காணி அலுவலகத்தில் ஓர் மின்சார நீரிறைக்கும் இயந்திரம் இணைத்தல் .. | 4,000 |
| (ii) யாழ்ப்பாண மாவட்டம் கராச்சி காரியாதிகாரி பிரிவிலுள்ள கிளிநொச்சி காணி அலுவலகத்தில் நீரிறைக்கும் இயந்திரத்திற்கான வீடு ஒன்று அமைத்தல் | 1,000 |
| (iii) யாழ்ப்பாணம் மாவட்டம் துணுக்காய் காரியாதிகாரி பிரிவு வவுனிக்குளம் VI ஆம் பிரிவிலுள்ள காணி அபிவிருத்திக் கண்காணிப்பாளரின் விடுதித்திருத்தல் .. | 1,500 |

2. மேற்குறிப்பிட்ட தொகைக்கோ, அல்லது அதிற்கூடிய தொகைக்கோ நெடுஞ்சாலைப்பகுதி, நீர்ப்பாசனப் பகுதி அல்லது கல்வி முதலிய திணைக்களங்களில் ஒப்பந்தகாரர்களாகப் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கும் இக்கேள்விக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணக் கச்சேரி காணிக் கிளையிலிருந்து 1973 ம் ஆண்டு ஒகஸ்த்து மாதம் 24 ம் திகதி பிற்பகல் 1.30 மணிவரை வழங்கப்படும். மேற்படி தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்கள் தமது ஒப்பந்த பதிவு பற்றிய அத்தாட்சிப் பத்திரங்களை அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப்பத்திர வைப்புப்பணமாக செலுத்தப்பெற்ற ரூபா 25 க்குப் பெறுமதியான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்படும் இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப்பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்படும் பற்றுச்சீட்டு இவ்வறிவித்தல் விளம்பரம் செய்த பின் செலுத்திப் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம், பிணையாகச் செலுத்தும் வைப்புப் பணங்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் மேற்கூறப்பட்ட சமர்ப்பணத்தைக் கொண்டே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

4. இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். மூடப்பட்டு சீல் வைக்கப்பெற்ற தபால் உறையின் மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரம் பதியப்பட்ட தபாலில் அனுப்பாதுவிடின் யாழ்ப்பாண செயலகத்திலுள்ள அலுவலக உதவியாளர் அறையில் இதற்கென வைத்திருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ நேரில் கொண்டு சென்று சேர்க்கலாம்.

5. முதலாவது பந்தியில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்குப் பின்பு கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொண்ட பின்பு மேற்கூறப்பட்ட விலாசத்தில் வைத்துத் திறக்கப்படும். கேள்விப்பத்திரக்காரர், கேள்விப்பத்திரங்கள் திறக்கும் சமயத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

7. எவராயினும் உடன்படிக்கை செய்யாத அல்லது வெளிப்படுத்தாது அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென எழுத்தில் அறிவித்தல் கிடைத்துப் பத்து நாட்களுக்குள் அனுமதிக்கப்பட்ட பிணைப் பணத்தைச் செலுத்தாதுவிடின், செலுத்தப்பெற்ற கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

8. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரர், ஒப்பந்த வேலையைச் சரிவரச் செய்வதற்கு அமர்த்தப்படும் நுட்ப வேலையாட்கள், மற்றும் பணியாட்கள் யாவரும் இலங்கைப் பிரசைகளாகவே இருத்தல் வேண்டும். அத்தகைய வேலையாட்கள் கூடுமானவரை வேலைத்தலத்துக்கு அருகாமையில் இருப்பவர்களாயும் இருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருடன் ஓர் ஒப்பந்தம் எழுதிக் கோரப்பட்ட தொகையில் ஐந்து வீதத்தைப் பிணைப்பணமாகக் கட்டி ஒப்பந்தம் எழுதப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் வேலையைப் பூர்த்தி செய்து கையளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவர்.

10. இவ்வேலை பற்றிய மேலும் ஏதேனும் தகவல் அறிய விரும்பின் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

11. குற்றப்பட்ட ஒப்பந்தக்காரர் பட்டியலிலுள்ளவர்களிடமிருந்து கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் எவ்வித கேள்விகளுக்கும் இடமின்றி இவ்வறிவித்தலிலுள்ள ஒரு பகுதியையோ அல்லது முழுப் பகுதியையோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அதிகாரம் பெற்றுள்ளார்.

13. கேள்விப்பத்திரகாரர்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் திறந்த திகதியிலிருந்து ஒரு மாதகாலம் வரையும் அமுலில் இருப்பதாக கருதப்படும்.

தி. முருகேசபிள்ளை,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

காணிக்கிளை,
செயலகம்,
யாழ்ப்பாணம்,
1973 ம் ௵ ஜூலை ௴ 13 ந உ.

7–980—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

### கல்வி அமைச்சு

*சங்கீதக் கருவிகளும் நடன உபகரணங்களும் விநியோகம்—1973*

சங்கீதக் கருவிகளும் நடன உபகரணங்களும் விநியோகித்தற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆந் திகதி மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். அவைகள் கல்வி அமைச்சுக் காரியாலயத்தில் மேலுள்ள 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று, விதிக்கப்பட்ட நேரம் திறக்கப்படும்.

3. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சுக் காரியாலயத்தில் (விநியோகக் கிளையிலிருந்து) 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆந் திகதி பி. ப. 3.30 மணிவரை பெறற்பாலனவான படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

4. சகல கேள்விகளும் இணைப்படியில் தயாரிக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் காகித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் " சங்கீதக் கருவிகளும் நடன உபகரணங்களும் விநியோகம்—1973 " என அடையாளமிடப்பட வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் அஞ்சல் மூலம் பதிவு செய்து அனுப்பப்படலாம். உள்ளூர்க் கேள்வியாளர் ஒருவர் தனது கேள்விப் பத்திரத்தை மேற்குறித்த முறையில் அனுப்ப விரும்பாவிடின், காகித உறையில் வைத்து முத்திரை பொறிக்கப்பட்ட தனது கேள்விப் பத்திரத்தை கேள்வியாளர் அல்லது அவருடைய முகவர் (காகித உறையின் மேல், 4 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளமும் கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபட வேண்டும்) கல்வி அமைச்சின் அலுவலக உதவியாளரிடம் நேரில் கொடுக்கலாம். அதனைப் பெற்றுக்கொண்டு பெற்றமையை ஒப்புக்கொள்தற்கான அறிவித்தலைக் கொடுத்தற்கு அன்னாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

6. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சில் (கொடுப்பனவு கிளையில்) அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள யாதேனும் கச்சேரியில் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100 கட்டி, அப்பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தே கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படலாம்.

7. விதிக்கப்படும் பிரகாரம் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு (விநியோகக் கிளைக்கு) விண்ணப்பித்து மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பெறலாம்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு யூலை மீ 16 ந் உ.

7–966—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச்சபைத்தலைவர் 1973.08.16 காலை 10 மணி வரை, இரசாயனங்கள் (கையிருப்பிலிருந்து) வழங்குவதற்கான கேள்விகளை ஏற்றுக்கொள்வார்.

2. மேலதிக விபரங்கட்கும் கேள்வி நிபந்தனைகட்குந் தயவு செய்து சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் 3/1—(4/36)

சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 16 ந் உ.

7–956—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

மொரட்டுவையிலுள்ள வடிவ அமைப்பு நிலையத்தில் உபயோகிப்பதற்கு வெட்டுமரம், மரக்கட்டைகள், சணல், களிமண், மணல் முதலிய பல்வேறு மூலப் பொருட்களை வழங்குவதற்கான கேள்விகளை உள்ளூர் வழக்குநர்களிடமிருந்து 1973.08.15 காலை 10 மணி வரை கொழும்பு 1, பிரிஸ்டல் வீதியிலமைந்திருக்கும் ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் கேள்விச்சபைத்தலைவர் ஏற்றுக்கொள்வார்.

முழு விபரங்கட்கும் கேள்வி நிபந்தனைகட்கும் தயவு செய்து சிறு கைத்தொழிற்பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் 3/1–(5/35)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 16 ந் உ.

7–957—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

---

### சிவில் விமானப் போக்குவரத்து திணைக்களம்

*யாழ்ப்பாண விமானத்துறை உண்டிச்சாலை, காங்கேசன்துறை*

விமானப் பயணிகளுக்கும் விமானத்துறைக்கு வருகை புரிவோருக்கும் மேற்காட்டியுள்ள விமானத்துறை நிருவாகக் கட்டிடத்துடன் இணைத்திருக்கும் விமானத்துறை உண்டிச்சாலையில் சிற்றுண்டி வழங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் வாய்ப்பளிப்பதற்குரிய கேள்விப் பத்திரங்களை 15.8.73 காலை 10.00 மணிவரை சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் (த. பெ. 535, கொழும்பு 1) ஏற்றுக்கொள்வார். இவ்வுண்டிச்சாலை நடத்துவதற்குரிய ஒப்பந்த காலம் 1.10.1973 தொடக்கம் ஓராண்டு காலமாகும்.

கேள்வியாளர்கள் உண்டிச்சாலை நடாத்துவதில் ஐந்து ஆண்டு அனுபவம் பெற்றவர்களாயும், அத்துடன், அல்லது உண்டிச்சாலையைத் திருப்திகரமான தரத்தில் நடத்துவதற்குரிய வளத்தினையும் ஆற்றலினையும் உடையவர்களென்றும் சிவில் விமானப் போக்குவரத்து திணைக்களம் பணிப்பாளரைத் திருப்திப்படுத்தக் கூடியவர்களாயும் இருத்தல் வேண்டும்.

சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளரின் அலுவலகத்திலோ அன்றி கொழும்புக்கு அப்பாலுள்ள கச்சேரிகளிலோ கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 50.00 செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுச் சமர்ப்பிப்பதன் மூலம் 10.8.73 நண்பகல் 12.00 மணிவரைக்கும் சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களப் பணிப்பாளரிடமிருந்து பெறக்கூடியதான படிவங்களிலே (இரு பிரதிகளில்) கேள்விப்பத்திரங்கள் பூர்த்தி செய்யப் பெறல் வேண்டும்.

சி. டபிள்யூ. எம். அப்பொன்சோ,
சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம்.

த. பெ. எண் 535,
லோற்றஸ் வீதி,
கொழும்பு-1,
1973.7.16.

7-906—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபனம்

கேள்விப்பத்திர அறிவித்தல் இல. 4/73

**பாவிக்கப்பட்ட மிதவைக் கலங்களின் விற்பனை**

கீழ்க் குறிப்பிடப்பட்ட மிதவைக் கலங்களை விற்பனை செய்வதற்கு சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களை 1973, ஆகஸ்ட் 10 ஆந் திகதி பி. ப. 2.30 மணிவரையும் கொழும்பு 1, துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபன எந்திரவியல் முகாமையாளர் ஏற்றுக்கொள்வார்.

கேள்விப் பத்திரங்களையும் ஏனைய விபரங்களையும் பின்வரும் அலுவலர்களிடமிருந்து பெறறுக்கொள்ளலாம்.

(1) நிருவாகச் செயலாளர்,
துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபனம்,
பொது அலுவலகம்,
கொழும்பு 1.

(2) கொள்வனவு அலுவலர்,
துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபனம்,
எந்திரவியற் பகுதி,
கொசசிக்கடை, கொழும்பு 13.

| விடய இல. | எவ்வித கலம் | பெயர் அல்லது தெளிவான இல. | அளவுகள் நீளம் | அகலம் | ஆழம் | உடற்பகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1. | கொதி நீராவி ரக் | " றோஸ் மேரி " —ரி. 11 | 65′—0″ | 17′—0″ | 9′—3″ | உருக்கு |
| 2. | ஷை | " பபற் " —ரி. 12 | 60′—9″ | 17′—0″ | 9′—0″ | ஷை |
| 3. | ஷை | " டயனு " —ரி. 13 | 60′—0″ | 17′—0″ | 9′—0″ | ஷை |
| 4. | ஷை | " பத்மினி " —ரி. | 60′—0″ | 15′—0″ | 6′—0″ | மரம் |
| 5. | ஷை | " அம்பலம் " —ரி. | | | | |
| 6. | நீர் வத்தை | " லபகம " —டபிள்யூ. 23 | 70′—6″ | 21′—0″ | 8′—6″ | உருக்கு |
| 7. | மோட்டார் லோஞ்சு | எம்.எல். "வென்டி"—எம். எல் 10 | 30′—6″ | 8′—1″ | 4′—4″ | மரம் எஞ்சினற்றதும் நீராவிப் பொறியற்றதும் |
| 8. | ஷை | எம். எல். "சுபோகினி"—எம்.எல்.6 | 52′—0″ | 10′—6″ | 5′—8″ | மரம் |
| 9. | இழுவைப் படகு | பீ. ஜீ. படகு—பீ 146 | 19′—6″ | 11′—0″ | 8′—0″ | ஷை |
| 10. | ஷை | பீ. ஜீ. படகு—பீ 144 | 36′ 10″ | 9′—6″ | 4′—6″ | ஷை |
| 11. | ஷை | பீ. ஜீ. படகு—பீ. 98 | 26′—0″ | 7′—6″ | 3′—8″ | ஷை |
| 12. | ஷை | பீ. ஜீ. படகு—பீ. 12 | 36′—9″ | 6′—6″ | 4′—6″ | ஷை |

எந்திரவியல் முகாமையாளர்.

7–1017—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

## பொருட்கள் விற்பனையும், பிறவும்

**கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலையில் பன்றிகள் ஏல விற்பனை**

கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலையிலுள்ள பன்றிகள் சிலதும் பன்றிக்குட்டிகளும் 20.8.73 காலை 10 மணி தொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். இவைகளை கிழமை நாட்களில் சாதாரண காரியாலய நேரத்தில பார்வையிடலாம். பன்றிகளின் விற்பனை ஒவ்வொரு பன்றியின் உயிர் நிறையுடன் அமையும்.

வாங்குவோர் விற்பனை முடிவில் பணம் செலுத்தி விலைப்பட்ட மிருகங்களை அன்று மாலை 2 மணிக்கு முன் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

கே. தங்கராசா,
அதிபர், திறந்த வெளிச்சிறைச்சாலை,
கோப்பாய்.

7–1004—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

## நானாவித அறிவித்தல்கள்

**கைத்தொழில், விஞ்ஞான அலுவல் அமைச்சு 406/4B/73/1 ஆம் இலக்க அறிவித்தல்**

பற்றிக் புடைவை அச்சடிப்புக்கான விண்ணப்பங்கள்

புடைவை வகைகளும், சாய, இரசாயன வகைகளை இறக்குமதி செய்வதற்கான அந்நியச்செலாவணியும் மட்டுப்பட்டுக் கிடைப்பதனால் பற்றிக் புடைவை அச்சடிப்புத் தாபனங்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 1973, செப்தெம்பர் 30 ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்றுக் கொள்ளப்படா என இத்தால் பொது அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கணிக்கும்போது பற்றிக் புடைவை அச்சடிப்பில் செய்முறை அனுபவமும் பயிற்சியும் பெற்றவர்களுக்கு முதன்மை அளிக்கப்படும்.

இதில் ஆர்வமுடையோர் கொழும்பு 2, 48, சிறீ ஜினரத்தின வீதியில் உள்ள கைத்தொழில், விஞ்ஞான அலுவல் அமைச்சின் நிகழ்ச்சி முறையமைப்பு, திட்ட நிறைவேற்றப் பகுதியில் கிடைக்கும் உரிய படிவத்தின் மூலம் தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.

இதனையிட்டு மதியுரையோ அறிவுரையோ தேவைப்படுமிடத்து கொழும்பு 7, 16, கிறெகறி வீதியில் உள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் தொடர்பு கொள்க.

விண்ணப்பங்கள் முறைப்படி நிரப்பப்பெற்று, " பற்றிக் புடைவை அச்சடிப்புக்கான விண்ணப்பம் " எனப் புறக்குறிப்பிடப்பெற்று, பதிவுக் கடிதம் மூலம் கைத்தொழில், விஞ்ஞான அலுவல் அமைச்சின் இணைச் செயலாளர் திரு. ஏ. வீரரத்தின அவர்களுக்கு 1973, செத்தெம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கும் வண்ணம் அனுப்பிவைக்கப்பெறல் வேண்டும்.

ஏ. வீரரத்தின,
இணைச் செயலாளர்,
கைத்தொழில், விஞ்ஞான அலுவல் அமைச்சு.

7–961—27.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 70

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் வரும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான **பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க **பிரசுராலய அதிபரால்** ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | **6.7.73** | வெள்ளி | .. | **27.6.73** | புதன் | .. | ந.ப. **12.00** |
| | | **13.7.73** | வெள்ளி | .. | **4.7.73** | புதன் | .. | ந.ப. **12.00** |
| | | **20.7.73** | வெள்ளி | .. | **11.7.73** | புதன் | .. | ந.ப. **12.00** |
| | | **27.7.73** | வெள்ளி | | **18.7.73** | புதன் | .. | ந.ப. **12.00** |
| **ஓகத்து** | .. | **3.8.73** | வெள்ளி | .. | **25.7.73** | புதன் | .. | ந.ப. **12.00** |
| | | **10.8.73** | வெள்ளி | .. | **1.8.73** | புதன் | .. | ந.ப. **12.00** |
| | | **17.8.73** | வெள்ளி | .. | **8.8.73** | புதன் | .. | ந.ப. **12.00** |
| | | **24.8.73** | வெள்ளி | .. | **15.8.73** | புதன் | .. | ந.ப. **12.00** |
| | | **31.8.73** | வெள்ளி | .. | **22.8.73** | புதன் | .. | ந.ப. **12.00** |
| **செத்தெம்பர்** | .. | **7.9.73** | வெள்ளி | .. | **29.8.73** | புதன் | .. | ந.ப. **12.00** |
| | | **14.9.73** | வெள்ளி | .. | **5.9.73** | புதன் | .. | ந.ப. **12.00** |
| | | **21.9.73** | வெள்ளி | .. | **11.9.73** | செவ்வாய் | | ந.ப. **12.00** |
| | | **28.9.73** | வெள்ளி | .. | **19.9.73** | புதன் | .. | ந.ப. **12.00** |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
**1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந உ.**


இலங்கை. அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.